## இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம் - 2017

இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க இலங்கை சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 08**

அச்சிடல் ஊடக விளம்பர நடவடிக்கைகளுக்காக தனியார் நிறுவனமொன்றிற்குச் செலுத்த வேண்டிய பணம் செலுத்தப்படாமையின் அடிப்படையில் அந்த நிறுவனத்தால் பணியகத்திற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கிற்குரிய தரப்பினருக்கு பணியகத்தால் செலுத்த வேண்டி ஏற்பட்ட ரூபா 3,540,661 தொகை தொடர்பாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது ஐக்கிய இராஜ்சியத்தில் நடைபெற்ற சந்தைச் செலவினம் (WTM – UK) இற்குரிய கிடைக்க வேண்டிய வாடகை ரூபா 273,563 தொகை முன்னைய ஆண்டின் கணக்கில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் ஏனைய வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் மிகை அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை பணியகத்தால் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 41,506,650 தொகையான கட்டிட வாடகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சர்வதேச இந்திய திரைப்பட விழாவிற்காக (IFFA) கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 196,800 பெறுமதியான கணனி, துணைப்பாகங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பணியகத்தின் நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டின் இறுதியில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய மீதியாக ரூபா 25,812,532 தொகை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பணியகத்திலிருந்து கிடைக்க வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்ட மீதி ரூபா 18,613,438 ஆனமையால் ரூபா 7,199,094 தொகையான விளக்கமளிக்கப்படாத வேறுபாடு காணப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே காண்பிக்கப்படுகின்ற விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | வியாபாரச் செலவினம் | 345,570,650 | பற்றுச்சீட்டு / விலைப்பட்டியல் / உள்ளடங்கிய ஏனைய துணை ஆவணங்களின் சான்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதியின் மூலப் பிரதி |
| (ஆ) | 08 தூதுவராலயங்களில் காணப்பட்ட காசு மீதி | 3,837,535 | மீதி உறுதிப்படுத்தல் |
| (இ) | 2013 ஆம் ஆண்டிற்குரிய சீன தூதுவராலயத்திலிருந்து கிடைக்க வேண்டிய தொகை | 19,731,593 | முன்னைய ஆண்டின் சீராக்கமாக சீராக்குவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் உறுதிச்சீட்டுக்களில் சான்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளின் மூலப் பிரதிகள் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) பெறவேண்டிய மீதிகளில் ரூபா 5,429,645 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 871,269 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்டு 05 வருடங்களுக்கு குறைவான காலமாகவும், ரூபா 555,809 தொகை 01 வருடத்திற்கு மேற்பட்டு 03 வருடங்களுக்கு குறைவான காலமாகவும் நிலுவை மீதிகளில் உள்ளடங்கியிருந்தது.

(ஆ) தூதுவராலயத்திற்கு அனுப்பப்பட்ட தொகையில் அறவிட வேண்டிய 03 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 2,388,346 ஆகவும், 01 வருடத்திற்கு மேற்பட்டு 03 வருடங்களுக்குக் குறைவான மீதி ரூபா 1,639,082 ஆகவும் மற்றும் 01 வருடத்திற்கு குறைந்த மீதி ரூபா 10,198,038 ஆகவும் காணப்பட்டன.

(இ) நானாவித கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்ட மீதிகளில் ரூபா 7,844,854 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 2,351,583 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்டு 04 வருடங்களுக்கு குறைந்த காலமாகவும், ரூபா 12,070,254 தொகை 01 வருடத்திற்கு மேற்பட்டு 02 வருடங்களுக்குக் குறைவான காலமாகவும் மீதிகளில் உள்ளடங்கியிருந்தது.

(ஈ) அட்டுறு செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட மீதிகளில் ரூபா 249,168 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 12,992,397 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்டு 03 வருடங்களுக்குக் குறைவான காலமாகவும், ரூபா 769,907 தொகை 01 வருடத்திற்கு மேற்பட்டு 02 வருடங்களுக்குக் குறைவான காலமாகவும் செலுத்த வேண்டிய மீதிகளில் உள்ளடங்கியிருந்தது.

(உ) பல்வேறு மேம்படுத்தல் செயற்பாடுகளுக்காக 2016 முதல் 2017 நவம்பர் வரை 04 வெளிநாட்டு தூதரகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,453,130 தொகையான முற்பணம் கணக்காய்வுத் திகதியான 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பிரிவின் 09 ஆம் உபபிரிவு | ஒவ்வொரு கலண்டர் வருடமும் முடிவுற்று மூன்று மாதங்கள் கடப்பதற்கு முன்னர் அவ்வாண்டின் பணியகத்தின் வேலை தொடர்பான அறிக்கையொன்று கலண்டர் வருடத்தின் ஏழு மாதங்கள் முடிவடையும் போது அரையாண்டு வருடாந்த கணக்குகள், பணியகத்தால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட எதிர்வரும் மூன்று வருடங்களுக்கான காலஎல்லையில் எதிர்பார்க்கப்பட்ட திட்டம் மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பான செயலாற்றல் மற்றும் அடைவுகளை உள்ளடக்கிய கூற்று என்பன அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் 5 ஆம் உப பிரிவு | மீளாய்வாண்டில் ரூபா 1,939,846,902 தொகையான மிகையொன்று காணப்பட்ட போதிலும், நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்ட நிதியினைப் பயன்படுத்தியதன் பின்னர் வருடத்தின் தேறிய வருமானத்தில் எஞ்சுகின்ற சகல தொகையும் திரட்டு நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,756 மில்லியன் தொகை குறுங்கால முதலீடாக அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக நிதி அமைச்சரின் அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | நிதிப்பிரமாணம் 102-110 வரை | ரூபா 308,700 பெறுமதியான மூன்று மடி கணனிகள் காணாமல் போனமை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 169(2) | காசோலை தேறுவதற்கு முன் சேவை வழங்கப்பட்டமையின் காரணமாக ரூபா 1,002,752 பெறுமதியான 05 காசோலைகளுக்குரிய பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. |
| (உ) | நிதிப்பிரமாணம் 757 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய அரசாங்க நிதிச்சுற்றறிக்கை இல. 03/2016 | மீளாய்வாண்டிற்குரிய நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பணியகத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,939,846,902 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,753,397,939 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 186,448,963 இனால் அதிகரித்திருந்தது. வியாபாரச் செலவினம் ரூபா 238,708,601 இனால் அதிகரித்திருந்த போதும், சுற்றுலா அபிவிருத்தி வரி ரூபா 318,383,615 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 6,238,009 தொகையான மிகை தளம்பல்களுடன் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,939,846,902 வரை அதிகரித்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 41,362,424 தொகையான பங்களிப்பு 2017 ஆம் ஆண்டு வரை ரூபா 2,048,230,651 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

### 3.2 பணியகத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

வெளித்தரப்பினரால் பணியகத்திற்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த 04 வழக்குகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தமின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது உலகத்தில் பிரதான 31 நாடுகளில் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட சந்தை மேம்படுத்தல் இசவ்களிக் எண்ணிக்கை 144 ஆக இருந்ததுடன் அதில் பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிக்கை 109 ஆகும்.

(ஆ) வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்டு சில வருடங்கள் முதல் மீளாய்வாண்டு வரை நடாத்தப்பட்ட பல்வேறு இசவ் தொடர்பான சுற்றுலா மேம்படுத்தல் செலவினம், வருமானம் மற்றும் வருகை என்பவற்றை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரிப்பைக் காண்பித்த போதிலும், சுற்றுலாத்துறை வருமானத்தினதும், வருகையினதும் அதிகரிப்பின் வேகம் குறைவடைந்திருந்தமை சமர்ப்பிக்கப்பட்ட புள்ளிவிபரத் தரவு அறிக்கைகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **ஆண்டு** | **சுற்றுலாச் செலவினம்** | **சுற்றுலா வருமானம்** | **வருமானத்தின் அதிகரிப்பு** | **வருமான அதிகரிப்பின் வேகம்** | **சுற்றுலா பிரயாணிகளின் வருகை** | **வருகையின் அதிகரிப்பு** | **வருகை அதிகரிப்பின் வேகம்** |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % | % | | % | % |
| 2013 | 472.27 | 221,147 | - | - | 1,274,593 | - | - |
| 2014 | 836.10 | 317,502 | 43.57 | - | 1,527,153 | 19.81 | - |
| 2015 | 646.31 | 405,492 | 27.71 | -15.86 | 1,798,380 | 17.76 | -2.05 |
| 2016 | 675.30 | 512,594 | 26.41 | -1.30 | 2,050,832 | 14.04 | -3.72 |
| 2017 | 855.18 | 598,356 | 16.73 | -9.68 | 2,116,407 | 3.20 | -10.84 |

(இ) சுற்றுலா மேம்படுத்தலைக் கவனத்தில் கொண்டு செய்யப்பட்ட செலவினத்தின் அதிக சதவீதம் அதாவது 80% அளவில் பிரதான நாடுகளுக்காக (விசேடமாக மேற்குலக நாடுகள்) பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த நாடுகளின் சுற்றுலா பிரயாணிகளின் வருகையின் வேகம் மீளாய்வாண்டளவில் வீழ்ச்சியடைந்திருந்தமை புள்ளிவிபரத் தரவுப் பகுப்பாய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் விசேடமாக கிழக்காசியா நாடான சீனாவின் சந்தை மேம்படுத்தலுக்காக வருடாந்தம் உயர்ந்த செலவினத்தைச் செய்த போதிலும், மீளாய்வாண்டு வரையில் சுற்றுலா பிரயாணிகளின் வருகையின் வேகம் காணப்படாத நாடுகளுக்கிடையே (நேர்ப் பெறுமதியுடன்) முதன்மை இடத்தைப் பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **நாடுகள்** | **2016** | | **2017** | |
|---|---|---|---|---|
| | **செலவினம்** | **வருகையின் அதிகரிப்பு வேகம்** | **செலவினம்** | **வருகையின் அதிகரிப்பு வேகம்** |
| | ரூபா.மில்லியன் | % | ரூபா.மில்லியன் | % |
| இத்தாலி | 25.31 | 7.58 | 40.32 | -17.14 |
| ஜேர்மன் | 49.20 | 2.50 | 71.26 | -17.31 |
| சுவீடன் | 15.03 | -12.01 | 21.66 | -4.75 |
| பிரான்ஸ் | 45.73 | 2.80 | 77.71 | -11.11 |
| ஐக்கிய இராச்சியம் | 144.11 | 4.0 | 114.20 | -8.97 |
| மத்திய கிழக்கு நாடுகள் | 60.50 | -7.07 | 101.96 | -17.70 |
| சீனா | 131.59 | -41.14 | 138.75 | -27.41 |
| இந்தியா | 40.87 | -17.49 | 68.76 | -4.98 |
| ஜப்பான் | 30.72 | 8.96 | 37.01 | -5.17 |
| மொத்தம் | 543.06 | | 671.63 | |

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சர்வதேச நடன விழாவிற்காக அனுசரணைப் பங்களிப்பை வழங்கியமைக்காக பணியகத்தினால் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டு ரூபா 1,500,000 முற்பணம் 2015 யூலை 03 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட விழா நடாத்தப்படாதிருந்ததுடன் கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணத் தொகையை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காலப்பகுதிக்குரிய செலவினம் மற்றும் ஆண்டின் இறுதியில் உள்ள கடப்பாடுகளை இனங்காண்பதற்கு சரியான கணக்கீட்டு முறைமையொன்று காணப்படாமையின் காரணமாக 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் மின்சாரம், தொலைபேசி, வியாபாரச் செலவினம், கட்டிட வாடகை என்பவற்றின் கூட்டுப்பெறுமதி ரூபா 280,495,439 தொகையான செலவினம் 2017 ஆம் ஆண்டின் போது இனங்கண்டு பிற்போட்டரீதியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் காணப்பட்ட ரூபா 8,766,603 தொகையான சொத்துக்களின் 50 விடயங்கள் தொடர்பாக அந்தச் சொத்துக்கள் பணியகத்தின் எந்த உத்தியோகத்தர் / பிரிவின் பொறுப்பில் காணப்படுகின்றது என காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் கடந்த ஆண்டின் 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பதவியணியினர் நிர்வாகம்

சுற்றுலா மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளில் தாபிக்கப்பட்ட இலங்கை தூதரகங்களில் நியமிக்கப்பட்ட வணிகத் திணைக்களத்தின் வணிக உத்தியோகத்தரையும், நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரையும் உள்ளடக்கிய (ஐக்கிய இராச்சியத்தின் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக) மூன்று உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கும் போது இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் முகாமைத்துவத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத பணிப்பாளர் பதவி மற்றும் சுற்றுலா மேம்படுத்தல் உத்தியோகத்தர் பதவி என்பவற்றுக்காக முறையற்ற பிரகாரம் ஒப்பந்த மற்றும் அமைய அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்தப் பதவிக்கான சம்பளம், போக்குவரத்து, வீட்டு வாடகை, தொலைபேசி, மேலதிக நேரம் போன்ற படிகள் மற்றும் ஏனைய படிகளாக 2008 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை நிறுவனம் செலவிட்ட ரூபா 179,438,804 தொகை சிக்கனமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்ளல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் விநியோகிக்கப்பட்ட கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு ‘‘2030 இன் நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தால் தமது விடயப்பரப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது தொடர்பாக அறிவிக்காமையின் காரணமாக அந்தப் பணிகள் தொடர்பாக

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்கை அடைந்து கொள்ள வேண்டிய முறைகள், இலக்குகள் என்பவற்றை அளவிடுவதற்கான குறிகாட்டிகளும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 29 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் பணியகத்தால் 31 நாடுகளில் வெளிநாட்டு சந்தை மேம்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு 02 நாடுகளில் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 6.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

#### 6.3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகைகள் வழிகாட்டியின் 4.2.1(அ),(ஆ) மற்றும் (இ) பிரிவின் பிரகாரம் எதிர்வரும் வருடத்திற்கான விரிவானதொரு பெறுகைத் திட்டத்துடன் ஆகக் குறைந்தது மூன்று வருடங்களை உள்ளடக்கும் வகையில் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 செப்தெம்பர் 26 முதல் 29 வரை பிரான்சில் நடைபெற்ற சர்வதேச பிரான்ஸ் சுற்றுலா சந்தைக்காக சந்தைக் கொட்டகைகளை வடிவமைத்தல் மற்றும் நிர்தாணித்தலுக்காக ரூபா 8,239,199 தொகையும், நடனக் குழுவை வழங்கியதற்காக ரூபா 1,031,848 தொகையும் உரிய சேவை வழங்குனர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தக் கொடுப்பனவுகளைச் செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3.2(அ), (ஈ), 2.14.1, 6.2.2 மற்றும் 7.7.1(அ), (ஆ (i)) பிரிவுகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 39 விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான பெறுமதிகளுக்கிடையே 21 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 6.5 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் 2015 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை கணக்காய்வுத் திகதியான 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.6 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

2016 ஆம் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பின்வரும் அவதானிப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்க்கப்படாமல் காணப்பட்டன.

(அ) 2014 ஆண்டின் உலக சுற்றுலா தினத்திற்கென குறிப்பிட்டு ரூபா 5,824,000 தொகை செலவில் அச்சிடப்பட்டிருந்த ரீசேட், அதன் விநியோக நிறுவனத்தின் பணிப்பாளரின் கூற்றின் பிரகாரம் அரசியல் கட்சியொன்றின் பிரசார நடவடிக்கை ஒன்றிற்காக அச்சிடப்பட்டு இருந்தமை.

(ஆ) சுற்றுலா துறைகளில் சமூகப் பொறுப்புக்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்காக இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு ரூபா 99,439,900 (வரி தவிர்த்து) தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அக்கொடுப்பனவு ஏற்றுக்கௌ்ளப்பட முடியாத கொடுப்பனவு என அவதானிக்கப்பட்டமை.

(இ) ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சி "(WTM)(UK)2014" இற்காக வர்த்தகக் கண்காட்சி கொட்டகைகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் வழங்கும் போது கூறுவிலை கோரல் கடிதம் திறக்கப்பட வேண்டிய திகதிக்கு 04 நாட்களுக்கு முன்னர் திறக்கப்பட்டமை, கேள்விதாரர் அல்லது முகவரொருவர் கேள்விக் கடிதத்தைத் திறக்கும் சந்தர்ப்பத்தில் சமூகமளிக்காமை, ஒப்பந்தக்காரர் பிரித்தானிய தூதுவர் அலுவலகத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு அதன் பிரதியொன்று மேம்படுத்தல் பணியகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியமைக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் வர்த்தகக் கண்காட்சி கொட்டகைகள் வெற்றிகரமானதாக நிர்மாணிக்கப்பட்டமைக்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரின் சான்றிதழொன்று இல்லாமல் அந் நிர்மாணங்களுக்காக ரூபா 17,803,508 தொகைக் கொடுப்பனவொன்று பணியகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 12 சீன ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்றிற்கு இலங்கையின் சுற்றுலாத்துறையில் கவர்ச்சிகரமான சில பிரதேசங்களை மேவுகை செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்ட FAM சுற்றுலாவிற்காக ரூபா 3,506,757 செலவிடப்பட்டிருந்ததுடன், அந்த சுற்றுலா தொடர்பான அறிக்கை, சீன ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை.

(உ) ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் நடைபெற்ற சுற்றுலா மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக (Leisure Travel and Tourism Fair - 2014) ரீசேட்டுக்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 7,800,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த ரீசேட் இருப்புக்கள் பணியகத்திற்கு கிடைக்கப் பெற்றிராததுடன் அக்கொள்வனவுகளுக்காக தயாரிக்கப்பட்ட பதிவேடுகள் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தமை.

(ஊ) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி நடைமுறைகளுக்கு புறம்பாக 2010 ஆம் ஆண்டு சர்வதேச இந்தியா திரைப்பட விழாவிற்காக (IIFA) ரூபா 1,116,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 07 மடி கணனிகள் மற்றும் 03 மேசைக் கணனிகள் களஞ்சியத்திற்கு கையேற்கப்பட்டமைக்கான அல்லது அலுவலர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டமைக்கான எழுத்து மூலச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததுடன் அவை பௌதீக பரிசோதனைக்கும் சமர்ப்பிக்கப்படாமை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | அட்டுறு செலவினங்கள் கணக்கு வைத்தல், பெறவேண்டிய கணக்குகளில் பதிதல், வீட்டு வாடகை கணக்கு வைத்தல் மற்றும் நிலையான சொத்துக்களைக் கணக்கு வைத்தல் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டில் குறைபாடுகள் காணப்பட்டமை மற்றும் அடியிதழ் பதிவேடு பேணப்படாமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு மற்றும் உள்ளபடியான செலவினங்களில் கவனிக்கத்தக்க முரண்பாடு நிலவுகின்றமை. |
| (இ) மனிதவள முகாமைத்துவம் | ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |
| (ஈ) பெறுகைகள் | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | பணியகத்தின் நிலையான சொத்துக்கள் சகலவற்றையும் இனங்கண்டு நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்காமை. |